135/DD/20

T.C-118

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS
## THE JAIL TEST PART – I (b) CODE OF CRIMINAL PROCEDURE

(Without Books)

Maximum Time : 2 hours | Maximum Marks : 80

## *IMPORTANT INSTRUCTIONS*

### OBJECTIVE TYPE
### கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

**NB :** **Words of masculine gender in these instructions shall, where the context so require, be taken to include feminine gender.**

இந்த அறிவுறுத்தலில் ஆண் பாலினரின் வார்த்தைகளில், சூழலுக்கேற்ப தேவைப்படின் பெண் பாலினரின் வார்த்தைகளும் அடங்கும்.

**This booklet should not be opened till the Invigilator gives a signal to open it. As soon as the signal is received you should open the booklet and then proceed to answer the questions.**

இந்த வினாத்தொகுப்பினை கண்காணிப்பாளரின் அனுமதி பெறுவதற்கு முன்னர் திறக்ககூடாது. கண்காணிப்பாளர் வினாத்தொகுப்பினை திறப்பதற்கு அனுமதி அளித்தவுடன் வினாத்தொகுப்பினை திறந்து விடையளிக்க தொடங்கலாம்.

1. This question booklet contains 80 number of objective type questions. Prior to attempting to answer, the candidate is requested to check whether all questions are there and ensure that there are no blank pages in the question booklet. In case, if any defect is noticed in the question paper, it shall be reported to the Invigilator immediately, **within first 10 minutes** after which no request will be entertained.

   இவ்வினாத்தாள் 80 கொள்குறி வகை வினாக்களை கொண்டது. விண்ணப்பதாரர்கள் விடையளிக்க தொடங்கும் முன், வினாத்தாளில் எல்லா வினாக்களும் இடம் பெற்றுள்ளனவா என்பதையும், ஏதேனும் சில பக்கங்கள் / வினாக்கள் அச்சிடப்படாமல் விடுபட்டுள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். வினாத்தாளில் ஏதேனும் குறை இருப்பின் வினாத்தாளைப் பெற்ற பின் பத்து நிமிடங்களுக்குள் அறை கண்காணிப்பாளரிடம் தெரிவிக்க வேண்டும். அதற்கு பிறகு தெரிவிக்கப்படும் கோரிக்கைகள் ஏதும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2. Answers all questions. All questions carry equal marks.

   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.

[Turn over

3. Candidate must write his Register Number in the space provided on the top right side of this booklet alone. Do not write anything else on the Question Booklet.
விண்ணப்பதாரரின் பதிவெண்ணை இவ்வினாத்தாளின் மேல் வலது பக்கத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுத வேண்டும். வினாத்தாளில் வேறு எதையும் எழுதக் கூடாது.

4. The sheet before the last page of the question booklet shall be used for any rough work.
வினாத்தாளின் கடைசி பக்கத்திற்கு முன் பக்கத்தில் rough work எழுதி பார்க்க உபயோகித்துக் கொள்ளவும்.

5. (a) Each question comprises of four responses i.e. (A), (B), (C) and (D). Candidate shall select only one correct response. In case, if the candidate feels that there are more than one correct response, **shade the response which he considers in the best**.
   (b) In any case, a candidate shall choose only one response for each question.
   (c) **If more than one answer is shaded for a question, the answer will be treated as wrong and no mark will be given for that question.**
   (d) The total marks will depend on the total number of correct responses marked in the OMR answer sheet. (For this purpose, only one shaded circle for a question will be taken into account for awarding mark)
   (a) ஒவ்வொரு வினாவிற்கும் (A), (B), (C), (D) என நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் அவற்றில் ஏதேனும் ஒரு சரியான விடையைத் தேர்வு செய்ய வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு வினாவிற்கு இருப்பதாக கருதினால், **அவற்றில் எவ்விடை மிகச் சரியானது என கருதுகிறீர்களோ, அவ்விடையை நிழலிட்டு காட்ட வேண்டும்.**
   (b) எவ்வாறிருப்பினும், ஒரு வினாவிற்கு ஒரே ஒரு விடையைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.
   (c) **ஒரு வினாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்களில் விடையளிக்கப்பட்டிருந்தால் அவ்விடை தவறானதாக கருதப்பட்டு, அவ்வினாவிற்கு மதிப்பெண் வழங்கப்படமாட்டாது.**
   (d) OMR விடைத் தாளில் குறிக்கப்பட்ட சரியான விடைகளைப் பொறுத்து, மொத்த மதிப்பெண்கள் வழங்கப்படும் (ஒரு வினாவிற்கு ஒரு வட்டத்தில் (குறிப்பிட்ட) நிழலிட்ட விடை மட்டுமே மதிப்பெண் வழங்க கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்).

6. Do not mark the answers in the Question Booklet.
வினாத்தாளில் விடைகளைக் குறிப்பிடக் கூடாது.

7. Candidate shall not remove or tear off any sheet from this question booklet. During the examination he is not allowed to take the question booklet out of the examination hall. Only after the examination is over, he shall be allowed to take the question booklet.
விண்ணப்பதாரர், வினாத்தாளின் எந்த ஒரு பக்கத்தையும், நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நடைபெறும் போது, வினாத்தாளை தேர்வு கூடத்தைவிட்டு வெளியே எடுத்து செல்ல அனுமதி கிடையாது. தேர்வு முடிந்த பின்னரே வினாத்தாளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

8. Failure to comply with any of the above instructions will render you liable to such action or penalty as the Commission may decide.
மேற்கண்ட அறிவுரைகளில் ஏதேனும் மீறப்படுமேயானால் தேர்வாணையம் எடுக்கும் தண்டனை / நடவடிக்கைக்கு உள்ளாக நேரிடும்.

9. In case of doubt, English version is the final.
வினாக்களில் சந்தேகமிருப்பின், ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

1. Which of the following provisions defines complaint under the code of criminal procedure 1973?

(A) Section 2(d) (B) Section 2(f)

(C) Section 2 (c) (D) Section 2(B)

கு.வி.மு.ச., 1973-ன் கீழ் எந்த பிரிவு புகாரினை வரையறை செய்கின்றது?

(A) பிரிவு 2 (d) (B) பிரிவு 2 (f)

(C) பிரிவு 2 (c) (D) பிரிவு 2 (B)

2. Every Court of sessions shall be presided over by a judge, to be appointed by the __________

(A) State Government

(B) Governor

(C) Tamil Nadu public service commission

(D) High Court

ஒவ்வொரு அமர்வு நீதிமன்றத்திற்கும் தலைமை வகிக்கும் நீதிபதி __________ஆல் நியமிக்கப்படுபவர்.

(A) மாநில அரசு

(B) ஆளுநர்

(C) தமிழ்நாடு பொதுத் தேர்வாணையம்

(D) உயர்நீதிமன்றம்

3. Place includes a house, building, tent, vehicle and __________ according to Section 2 (p) of Crpc, 1973.

(A) Court (B) Vessel

(C) Parliament (D) Legislature

கு.வி.மு.ச., 1973 பிரிவு 2 (p)-ன் படி "இடம்" என்பதில் வீடு, கட்டிடம், கூடாரம், வாகனம் மற்றும் __________ என்பதும் அடங்கும்?

(A) நீதிமன்றம் (B) கலம்

(C) பாராளுமன்றம் (D) சட்டமன்றம்

4. The affidavit mentioned in ———— may be attached to the duplicate of the summons and returned to the court.

(A) Section 62 (B) Section 66

(C) Section 68 (D) Section 69

————ல் சொல்லப்பட்டுள்ள உறுதிமொழி ஆவணத்தை அழைப்பாணையின் இரண்டாவது படியுடன் (Duplicate) இணைந்து நீதிமன்றத்துக்கு திருப்பி அனுப்பப்படலாம்.

(A) பிரிவு 62 (B) பிரிவு 66

(C) பிரிவு 68 (D) பிரிவு 69

5. Summons to produce document or other thing is provided in which section?

(A) Section 90 (B) Section 91

(C) Section 92 (D) Section 93

ஒரு ஆவணத்தையோ அல்லது வேறு பொருளையோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு அழைப்பாணை அனுப்புவதை கூறும் சட்டப்பிரிவு எது?

(A) பிரிவு 90 (B) பிரிவு 91

(C) பிரிவு 92 (D) பிரிவு 93

6. A warrant of arrest can be executed at any place in

(A) Only the local limits of the Jurisdiction

(B) Only within the state

(C) India

(D) Can't be executed

ஒரு கைதுக்கான பிடியாணையை எதுவரை நிறைவேற்றலாம்?

(A) நீதிமன்றத்தின் அதிகார எல்லைவரை மட்டுமே

(B) மாநிலத்திற்குள் மட்டுமே

(C) இந்தியா

(D) நிறைவேற்ற முடியாது

7. Security for good behaviour from suspected persons provided in Cr.P.C

(A) Section 107 (B) Section 108

(C) Section 109 (D) Section 110

சந்தேகிக்கப்படும் நபர்களிடமிருந்து நன்னடத்தைக்கான பிணையம் பெறுதல் பற்றி எந்தப் பிரிவு கூறுகின்றது?

(A) பிரிவு 107 (B) பிரிவு 108

(C) பிரிவு 109 (D) பிரிவு 110

8. What procedure to be followed when investigation can't be completed within 24 hours?

(A) Accused can be released

(B) Accused forwarded to Magistrate

(C) Accused forwarded to Superintendent of Police

(D) Accused kept in police lock-up

புலன் விசாரணை 24 மணி நேரத்திற்குள் முடிக்கப்பட முடியாத போது என்ன நடைமுறையை பின்பற்றப்பட வேண்டும்?

(A) எதிரி (அ) குற்றஞ்சாட்டப்பட்டவர் விடுவிக்கப்படலாம்

(B) குற்றஞ்சாட்டப்பட்டவர் நடுவர் முன்பு ஆஜர்படுத்த வேண்டும்

(C) குற்றஞ்சாட்டப்பட்டவர் காவல் கண்காணிப்பாளரிடம் அனுப்ப வேண்டும்

(D) குற்றஞ்சாட்டப்பட்டவரை காவல் நிலையத்திலேயே வைக்க வேண்டும்

9. If the accused pleads guilty in questioning, the Judge shall record the plea and may in his discretion

(A) Discharge him (B) Give benefit of doubt

(C) Convict him (D) May acquit him

குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றம் செய்ததாக ஒப்புக்கொண்டால், நீதிபதி அந்த ஒப்புதல் உரையை பதிவு செய்தல் வேண்டும் மற்றும் தன்னுடைய விருப்புரிமையின் படி அவரை

(A) விடுவிக்கலாம் (B) சந்தேகப் பலன் அளிக்கலாம்

(C) தண்டிக்கலாம் (D) விடுதலை செய்யலாம்

10. Power of magistrate to order person to give specimen signatures or handwriting

(A) Is against constitution (B) Is as per sec 311-A CrPc

(C) Is against personal liberty (D) None of the above

ஒரு நபரை மாதிரி கையொப்பம் (அ) கையெழுத்து அளிக்குமாறு உத்திரவிடுவதற்கான நீதித்துறை நடுவரின் அதிகாரம்

(A) அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது (B) கு.வி.மு.ச. பிரிவு 311-A படி சரியானது

(C) தனிநபர் சுதந்திரத்திற்கு எதிரானது (D) மேற்சொன்ன எதுவுமில்லை

11. Withdrawal from prosecution is ——————

(A) Not permitted (B) Permitted U/S 321

(C) Permitted U/S 320 (D) Partly permitted

குற்ற வழக்கிலிருந்து திரும்ப பெற்றுக் கொள்ளுதல் என்பது

(A) அனுமதிக்கப்படாது (B) பிரிவு 321-ன் கீழ் அனுமதிக்கப்படும்

(C) பிரிவு 320-ன் கீழ் அனுமதிக்கப்படும் (D) பகுதியாக அனுமதிக்கப்படும்

12. Power of High Court to transfer cases and appeals

(A) Is prohibited U/S 403 (B) Is prohibited U/S 406

(C) Is allowed U/S 407 (D) None of the above

வழக்குகள் மற்றும் மேல்முறையீடுகளை மாற்றம் செய்வதற்கு உயர்நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம்

(A) பிரிவு 403 -ன் கீழ் தடைசெய்யப்படுகிறது

(B) பிரிவு 406 -ன் கீழ் தடைசெய்யப்படுகிறது

(C) பிரிவு 407 -ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது

(D) மேற்சொன்ன எதுவுமில்லை

13. If an accused commit non-cognizable offence, a police officer

(A) Can arrest directly
(B) Can not arrest
(C) Can detain directly
(D) Can arrest with warrant

ஒரு குற்றவாளி கைது செய்வதற்குரியதல்லாத குற்றத்தை செய்துவிட்டால், ஒரு காவல் அலுவலர் அக்குற்றவாளியை

(A) நேரடியாக கைது செய்யலாம்
(B) கைது செய்ய இயலாது
(C) நேரடியாக சிறையில் அடைக்கலாம்
(D) பிடியாணையுடன் கைது செய்யலாம்

14. Section 40 of CrPC deals with

(A) Powers of public officer
(B) Duty of public
(C) Duties of village Officer
(D) Powers of Judicial Officer

கு.வி.மு.ச. பிரிவு 40 எதைப் பற்றிக் கூறுகிறது?

(A) பொது அலுவலரின் அதிகாரங்கள்
(B) பொது மக்களின் கடமை
(C) கிராம அலுவலரின் கடமைகள்
(D) நீதித்துறை நடுவரின் அதிகாரங்கள்

15. Who can issue "Search Warrant" under CrPc, 1973?

(A) Any Court
(B) District Court only
(C) High Court Only
(D) Income tax authority

சோதனைக் கட்டளையை யார் பிறப்பிக்கலாம்?

(A) எந்த நீதிமன்றமும்
(B) மாவட்ட நீதிமன்றம் மட்டும்
(C) உயர் நீதிமன்றம் மட்டும்
(D) வருமான வரி அதிகாரிகள்

16. Who among the following person can issue order in urgent cases of nuisance according to section 144?

(A) High Court Judge
(B) Metropolitan Magistrate
(C) Sessions Judge
(D) Executive Magistrate

கு.வி.மு.ச. பிரிவு 144 படி அவசர தொல்லை காலங்களில் உத்திரவு பிறப்பிக்கும் அதிகாரம் பின்வரும் நபர்களில் யாரிடம் இருக்கிறது?

(A) உயர்நீதிமன்ற நீதிபதி
(B) பெருநகர குற்றவியல் நீதித்துறை நடுவர்
(C) அமர்வு நீதிபதி
(D) நிர்வாக நடுவர்

17. Who can obtain security for keeping the peace in other cases or disturb the public tranquility as per section 107 of CrPc?

(A) Sessions Judge (B) Judicial Magistrate

(C) Executive Magistrate (D) Chief Judicial Magistrate

கு.வி.மு.ச. பிரிவு 107 படி பொது அமைதிக்கு பங்கம் விளைவித்தல் அல்லது மற்ற நேரங்களில் அமைதியாக இருப்பதற்கு யார் பிணையம் பெறலாம்?

(A) அமர்வு நீதிபதி (B) நீதித்துறை நடுவர்

(C) நிர்வாகத்துறை நடுவர் (D) முதன்மை நீதித்துறை நடுவர்

18. The expansion of word "FIR" is

(A) First Information Report (B) First Inquest Report

(C) First Indian Research (D) Fake Information Report

FIR என்பதன் விரிவாக்கம்

(A) முதல் தகவல் அறிக்கை (B) முதல் பிரேத அறிக்கை

(C) முதல் இந்திய ஆராய்ச்சி (D) பொய் தகவல் அறிக்கை

19. Which section of criminal procedure code, 1973 deals with custodial death?

(A) Section 154 (B) Section 176

(C) Section 175 (D) Section 174

கு.வி.மு.ச. 1973 -ன் எந்தப் பிரிவு சிறை மரணம் பற்றி கூறுகின்றது?

(A) பிரிவு 154 (B) பிரிவு 176

(C) பிரிவு 175 (D) பிரிவு 174

20. In which cases a Police officer has authority to arrest without warrant

(A) All offences (B) Cognizable offences

(C) Non-Cognizable offences (D) Petty cases

காவல் துறையினர் எந்த வழக்கில் ஒருவரை பிடி கட்டளையின்படி கைது செய்யலாம்

(A) அனைத்து குற்றங்களிலும் (B) கைது செய்யகூடிய குற்றம்

(C) கைது செய்யகூடாத குற்றம் (D) சிறு வழக்குகள்

21. Same kind of three offences may be charged together within ———— as per sec 219 of CrPc?

(A) 3 years (B) One year

(C) Two years (D) Six months

கு.வி.மு.ச. பிரிவு 219-ன் படி ஒரே தன்மை கொண்ட மூன்று குற்றங்களை ————க்குள் ஒரே குற்றச்சாட்டில் சேர்க்கலாம்.

(A) 3 வருடங்கள் (B) 1 வருடம்

(C) 2 வருடங்கள் (D) 6 மாதங்கள்

22. Section 236 of CrPc deals with

(A) Arguments (B) Judgment of acquittal

(C) Previous conviction (D) Framing of charges

கு.வி.மு.ச. பிரிவு 236 எதைச் சொல்கிறது?

(A) வாதங்கள் (B) விடுதலைக்கான தீர்ப்பு

(C) முந்தைய தண்டனை (D) குற்றச்சாட்டு வனைதல்

23. According to section 61, a summons issued by a court must be in

(A) Triplicate (B) Duplicate

(C) Writing and duplicate (D) Orally

பிரிவு 61 படி நீதிமன்றத்தால் அனுப்பிய அழைப்பானை எப்படி இருக்க வேண்டும்?

(A) முப்படிகளில்

(B) இரட்டைப் படிகளில்

(C) எழுத்து வடிவில் மற்றும் இரட்டைப் படிகளில்

(D) வாய்மொழியாக

24. In a Cognizable offence a police officer ————

(A) Can't arrest an accused without warrant

(B) Can arrest an accused without warrant

(C) Can't investigate without court order

(D) Accused need not be produced before magistrate

ஒரு காவல் அலுவலர் பிடியாணை வேண்டாக் குற்றத்தில்

(A) பிடியாணையின்றி ஒரு எதிரியை கைது செய்ய முடியாது

(B) பிடியாணையின்றி கைது செய்ய முடியும்

(C) நீதிமன்ற அனுமதி இல்லாமல் புலனாய்வு செய்ய முடியாது

(D) குற்றஞ்சாட்டப்பட்டவரை நீதித்துறை நடுவர் முன்பு ஆஜர்படுத்த தேவையில்லை

25. Plea bargaining sections is

(A) 265 – 266 (B) 265 – 271

(C) 265A – 265L (D) 260 – 265

பேரம் பேசி வழக்கினை முடித்தல் என்பதன் சட்டப் பிரிவுகள்

(A) 265 – 266 (B) 265 – 271

(C) 265A – 265L (D) 260 – 265

26. Which of the following provision deals with addition or alteration of charge by court?

(A) Section 214 (B) Section 215

(C) Section 216 (D) Section 218

பின்வரும் பிரிவுகளில் எது குற்றச்சாட்டுகளை சேர்த்தல் அல்லது மாற்றுதல் பற்றி கூறுகின்றது?

(A) பிரிவு 214 (B) பிரிவு 215

(C) பிரிவு 216 (D) பிரிவு 218

27. Which of the following court has Jurisdiction to cancel the bail under section 439 Cr.P.C?

(A) The court of session
(B) High Court and Court of Session
(C) Magistrate
(D) Executive Magistrate

பின்வரும் நீதிமன்றங்களில் எந்நீதிமன்றம் பிரிவு 439 கீழ் பிணையத்தை நீக்குவதற்கு அதிகாரம் பெற்றுள்ளது?

(A) அமர்வு நீதிமன்றம்
(B) உயர் நீதிமன்றம் மற்றும் அமர்வு நீதிமன்றம்
(C) நீதித்துறை நடுவர்
(D) நிர்வாகத்துறை நடுவர்

28. Police to enquiry into the suicide or cause of death is called U/S 174 of CrPC?

(A) Post Mortem
(B) Mahazar
(C) Inquest
(D) Investigation

பிரிவு 174-ன் கீழ் தற்கொலை (அ) இறப்பிற்கான காரணம் குறித்து காவலர் விசாரணை மேற்கொள்வது

(A) சடலக் கூறாய்வு
(B) மகஜர்
(C) பிரேத விசாரணை
(D) புலன் விசாரணை

29. When can a trial court release an accused on bail under section 389(3) or CrPC after conviction?

(A) Where accused is on bail and imprisonment is not exceeding 3 years
(B) Where accused is on bail and imprisonment is not exceeding 5 years
(C) Where accused is on bail and imprisonment is not exceeding 7 years
(D) where offence is exclusively bailable

எப்பொழுது விசாரணை நீதிமன்றம் மேல்முறையீடு இருக்கும்போது தண்டனையை நிறுத்தி பிணையில் விடலாம்?

(A) குற்றஞ்சாட்டப்பட்டவர் பிணையிலிருந்து 3 ஆண்டுகளுக்கு மிகாமல் சிறை தண்டனை பெறும் போது
(B) குற்றஞ்சாட்டப்பட்டவர் பிணையிலிருந்து 5 ஆண்டுகளுக்கு மிகாமல் சிறை தண்டனை பெறும் போது
(C) குற்றஞ்சாட்டப்பட்டவர் பிணையிலிருந்து 7 ஆண்டுகளுக்கு மிகாமல் சிறை தண்டனை பெறும் போது
(D) முழுவதும் பிணையில் விடக்கூடிய குற்றம் எனில்

30. When an appeal shall not be permissible from lower court cases?

(A) Theft Cases (B) Petty Cases

(C) Robbery Cases (D) Defamation Cases

கீழ் நீதிமன்றங்களிலிருந்து வழக்குகள் எப்பொழுது மேல்முறையீடு அனுமதிக்கப்படுவதில்லை?

(A) திருட்டு வழக்குகள் (B) சிறு வழக்குகள்

(C) கூட்டுக் கொள்ளை வழக்குகள் (D) அவதூறு வழக்குகள்

31. Judgment of a criminal court must be in

(A) Hindi (B) English

(C) Tamil (D) Court Language

குற்றவியல் நீதிமன்றங்களின் தீர்ப்பு ——————ல் இருக்க வேண்டும்.

(A) இந்தி (B) ஆங்கிலம்

(C) தமிழ் (D) நீதிமன்ற மொழி

32. Which section deals with direction of warrant for execution?

(A) Section 419 (B) Section 420

(C) Section 421 (D) Section 422

எந்தப் பிரிவு பிடியாணையை நிறைவேற்றுவதற்கான கட்டளை பற்றி கூறுகின்றது?

(A) பிரிவு 419 (B) பிரிவு 420

(C) பிரிவு 421 (D) பிரிவு 422

33. Which of the following courts can grant bail for a person apprehending arrest?

(A) Judicial Magistrate Class I (B) Sessions Court

(C) Judicial Magistrate Class II (D) Executive Magistrate

எந்த நீதிமன்றம் கைது செய்யப்படுவார் என எதிர்நோக்குபவரை முன் ஜாமீனில் விட உத்திரவிடலாம்?

(A) முதல் வகுப்பு நீதித்துறை நடுவர் (B) அமர்வு நீதிபதி

(C) இரண்டாம் வகுப்பு நீதித்துறை நடுவர் (D) நிர்வாகத்துறை நடுவர்

34. Section 2(C) is defined

(A) Cognizable offence

(B) Non cognizable affiance

(C) Bailable offence

(D) Complaint

பிரிவு 2(C) எதை வரையறுக்கின்றது.

(A) கைது செய்வதற்குரிய குற்றம்

(B) கைது செய்வதற்குரியதல்லாத குற்றம்

(C) பிணையில் விட முடிந்த குற்றம்

(D) முறையீடு

35. Which provision deals with disposal of property at conclusion of trial?

(A) Section 451

(B) Section 453

(C) Section 454

(D) Section 452

வழக்கு விசாரணையின் முடிவில் சொத்தினை அளிப்பது பற்றி கூறும் சட்டப்பிரிவு?

(A) பிரிவு 451

(B) பிரிவு 453

(C) பிரிவு 454

(D) பிரிவு 452

36. When appeal can be abated?

(A) Lunacy of an appellant

(B) Fradulent attitude of appellant

(C) Mistake of an appellant

(D) Death of the appellant

எப்பொழுது மேல்முறையீடு அற்றுப்போகலாம்?

(A) மேல்முறையீட்டாளர் மனநிலை பாதிப்பால்

(B) மேல்முறையீட்டாளர் நேர்மையின்மையால்

(C) மேல்முறையீட்டாளர் தவறினால்

(D) மேல்முறையீட்டாளர் இறப்பினால்

37. The CrPc, 1973 came into force on

(A) April 1, 1973 (B) April 4, 1973

(C) April 1, 1974 (D) January 1, 1973

கு.வி.மு.ச. 1973 அமுலுக்கு வந்தது

(A) ஏப்ரல் 1, 1973 (B) ஏப்ரல் 4, 1973

(C) ஏப்ரல் 1, 1974 (D) ஜனவரி 1, 1973

38. Arrest by a Executive Magistrate is provided under Sec.

(A) 41 of Crpc (B) 42 of Crpc

(C) 43 of Crpc (D) 44 of Crpc

நிர்வாக துறை நடுவரால் கைது செய்யப்படுதல் குறித்து தெரிவிக்கும் குற்றவிசாரணை முறை சட்டப்பிரிவு

(A) பிரிவு 41 (B) பிரிவு 42

(C) பிரிவு 43 (D) பிரிவு 44

39. A person arrested by the police officer without warrant cannot be detained in custody of period exceeding?

(A) 12 hours (B) 24 hours

(C) 1 day (D) 2 days

காவல் அதிகாரியால் பிடியாணையின்றி கைது செய்யப்பட்ட ஒரு நபரை எவ்வளவு மணி நேரத்திற்கு மேல் காவலில் வைத்திருக்க முடியாது?

(A) 12 மணி நேரம் (B) 24 மணி நேரம்

(C) 1 நாள் (D) 2 நாட்கள்

40. A revision petition may be filed in the sessions court by

(A) Defence

(B) Prosecution or defence

(C) Suo motu

(D) Acquittal person

அமர்வு நீதிமன்றத்தில் மறு ஆய்வு மனு யாரால் தாக்கல் செய்யப்படலாம்?

(A) எதிர்தரப்பால்

(B) அரசு தரப்பு (அ) எதிர்தரப்பால்

(C) தானாகவே

(D) விடுதலையான நபர்

41. A non-cognizable offence has been defined under ————————

(A) Section 2(b)

(B) Section 2(c)

(C) Section 2(l)

(D) Section 2(d)

கைது செய்வதற்குரியதல்லாத குற்றம் எதன் கீழ் வரையறுக்கப்படுகின்றது?

(A) பிரிவு 2(b)

(B) பிரிவு 2(c)

(C) பிரிவு 2(l)

(D) பிரிவு 2(d)

42. Classification of offence has been given in the code of criminal procedure under

(A) Section 320

(B) Schedule I

(C) Schedule II

(D) Section 420

குற்றவியல் விசாரணை முறைச் சட்டத்தின் கீழ் குற்றங்களின் வகைப்பாடுகள் எதன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது?

(A) பிரிவு 320

(B) அட்டவணை I

(C) அட்டவணை II

(D) பிரிவு 420

43. Section 87 of code of criminal procedure authorises issuance of warrant

(A) In lieu of summons

(B) In addition to summons

(C) Both (A) and (B)

(D) None of the above

கு.வி.மு.ச. பிரிவு 87-ன் கீழ் பிடியாணை வழங்குவதற்கு அதிகாரம் என்பது

(A) அழைப்பாணைக்கு மாற்றாக

(B) அழைப்பாணைக்கு கூடுதலாக

(C) (A) மற்றும் (B)

(D) மேற்சொன்ன எதுவுமில்லை

44. Every warrant of arrest issued by a court shall be

(A) In writing

(B) In duplicate

(C) Signed by the Judge (or) presiding officer of such court

(D) (A) and (C) only

நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும் கைதுக்கான பிடியாணையின் வடிவம் எவ்வாறு இருக்க வேண்டும்?

(A) எழுத்து வடிவில்

(B) நகலுடன்

(C) நீதிமன்ற அலுவலர் (அ) நீதிபதியின் கையொப்பம்

(D) (A) மற்றும் (C)

45. An executive magistrate is empowered to grant remand under section 167 Cr.P.C for a maximum period of

(A) 15 days (B) 7 days

(C) 65 days (D) 10 days

கு.வி.மு.ச. பிரிவு 167-ன் கீழ் நிர்வாக நடுவர் அதிகபட்சமாக எத்தனை நாள் நீதிமன்ற காவலில் வைக்க உத்திரவிடலாம்?

(A) 15 நாட்கள் (B) 7 நாட்கள்

(C) 65 நாட்கள் (D) 10 நாட்கள்

46. An act of omission punishable by law is called

(A) negligence (B) illegal act

(C) offence (D) judicial proceedings

அவ்வப்போது அமலிலுள்ள சட்டத்தினை மீறுதல் என்பது

(A) கவனமின்மை (B) சட்டத்திற்கு புறம்பான செயல்

(C) குற்றம் (D) நீதி நடவடிக்கை

47. Which of the following court has jurisdiction to cancel the bail under section 439 Cr.P.C?

(A) The Court of session (B) High court

(C) Court of Judicial Magistrate (D) Both (A) and (B)

பின்வரும் நீதிமன்றங்களில் எந்நீதிமன்றத்திற்கு பிணையினை நீக்குவதற்கு பிரிவு 439-ன் கீழ் அதிகாரம் பெற்றுள்ளது?

(A) அமர்வு நீதிமன்றம் (B) உயர் நீதிமன்றம்

(C) நீதித்துறை நடுவர் நீதிமன்றம் (D) (A) மற்றும் (B) இரண்டும்

48. U/S 259 Cr.P.C. in the course of the trial of a summons case relating to an offence punishable, with imprisonment of what duration?

(A) 1 month
(B) 2 months
(C) 6 months
(D) 1 year

கு.வி.மு.ச. பிரிவு 259-ன் கீழ் அழைப்பாணை வழக்கு விசாரணைகளில் அதிகபட்ச தண்டனைக்காலம் என்ன?

(A) 1 மாதம்
(B) 2 மாதம்
(C) 6 மாதம்
(D) 1 வருடம்

49. Power to reject sureties by a Magistrate is provided in

(A) Sec. 121 of Crpc
(B) Sec. 122 of Crpc
(C) Sec. 123 of Crpc
(D) Sec. 124 of Crpc

ஒரு நடுவர் ஜாமீன்தாரர்களை நிராகரிப்பதற்கான அதிகாரம் வழங்கும் குற்றவிசாரணை முறை சட்டபிரிவு

(A) பிரிவு 121
(B) பிரிவு 122
(C) பிரிவு 123
(D) பிரிவு 124

50. Who can try summary proceedings under section 260 of Cr.P.C?

(A) Chief Judicial Magistrate
(B) Metropolitan Magistrate
(C) Magistrate of the first class specially empowered by the High court
(D) All the above

கு.வி.மு.ச. பிரிவு 260-ன் கீழ் சுருக்க முறை விசாரணை மேற்கொள்ள யாருக்கு அதிகாரம் இருக்கின்றது?

(A) முதன்மை நீதித்துறை நடுவர்
(B) பெருநகர நீதித்துறை நடுவர்
(C) உயர்நீதிமன்றத்தால் சிறப்பு அதிகாரம் பெற்ற முதல் வகுப்பு நீதித்துறை நடுவர்
(D) மேற்சொன்ன அனைத்தும்

51. Which section says "stop the proceedings" under Cr.P.C?

(A) Section 257
(B) Section 258
(C) Section 259
(D) Section 260

கு.வி.மு.ச.-ன் கீழ் எந்த பிரிவு நீதிமன்றம் தன் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல் பற்றி கூறுகின்றது?

(A) பிரிவு 257
(B) பிரிவு 258
(C) பிரிவு 259
(D) பிரிவு 260

52. Withdrawal of complaint can be made to only in

(A) Summons cases
(B) Warrant cases
(C) Session cases
(D) Cognizable cases

புகாரினை எவ்வழக்குகளில் திரும்ப பெறப்படலாம்?

(A) அழைப்பாணை வழக்குகள்
(B) பிடியாணை வழக்குகள்
(C) அமர்வு நீதிமன்ற வழக்குகள்
(D) கைது செய்வதற்குரிய குற்றம்

53. Which provision deals with the procedure in case of accused being "lunatic (or) unsound mind"?

(A) Section 326
(B) Section 327
(C) Section 328
(D) Section 329

எந்த பிரிவு குற்றஞ்சாட்டப்பட்டவர் புத்தி சுவாதீனம் இன்றி இருப்பார் எனில் பின்பற்ற வேண்டிய நடைமுறையை பற்றி கூறுகின்றது?

(A) பிரிவு 326
(B) பிரிவு 327
(C) பிரிவு 328
(D) பிரிவு 329

54. What can a magistrate do after passing a judgement?

(A) Correct a clerical or arithmetical errors

(B) Set aside the Judgement

(C) Review of its own Judgement

(D) Alter content of Judgement

தீர்ப்பினை வழங்கிய பிறகு அத்தீர்ப்பினை நீதித்துறை நடுவர் என்ன செய்ய முடியும்?

(A) எழுத்துப்பிழை (அ) கணக்குப்பிழையை சரிசெய்யலாம்

(B) அத்தீர்ப்பினை இரத்து செய்யலாம்

(C) தனது தீர்ப்பையே மறு ஆய்வு செய்தல்

(D) தீர்ப்பினுடைய உள்ளடக்கத்தை மாற்றுதல்

55. What does section 363 of criminal procedure code provided?

(A) Judgement when to be translated

(B) Send copy of Judgement to District Magistrate

(C) Copy of Judgement to be given to accused

(D) Appeal from conviction

குற்றவியல் விசாரணை முறைச் சட்டத்தின் பிரிவு 363 என்ன செய்கிறது?

(A) தீர்ப்பு எப்பொழுது மொழி பெயர்க்கப்பட வேண்டும்

(B) தீர்ப்பின் நகலை மாவட்ட நடுவர்க்கு அனுப்புதல்

(C) தீர்ப்பின் நகலை குற்றஞ்சாட்டப்பட்டவர்க்கு கொடுக்கப்பட வேண்டும்

(D) தண்டனைத் தீர்ப்பிலிருந்து மேல்முறையீடு

56. What is the limitation period for filing appeal against acquittal by the state?

(A) 30 days

(B) 60 days

(C) 10 days

(D) No limitation

விடுதலைக்கு எதிராக அரசால் மேல்முறையீடு செய்வதற்கான கால வரையறை என்ன?

(A) 30 நாட்கள்

(B) 60 நாட்கள்

(C) 10 நாட்கள்

(D) கால வரம்பு இல்லை

57. What are the powers of appellate court?

(A) Dismiss the appeal

(B) Reverse the sentence

(C) Direct the further inquiry

(D) All the above

மேல்முறையீட்டு நீதிமன்றத்திற்கான அதிகாரங்கள் யாவை?

(A) மேல்முறையீடை தள்ளுபடி செய்தல்

(B) தண்டனையை மாற்றுதல்

(C) மறுநீதிமன்ற விசாரணைக்கு உத்திரவிடுதல்

(D) மேற்சொன்ன அனைத்தும்

58. Warrants of arrest may be directed to whom?

(A) Police officers (B) Court officers

(C) Executive magistrate (D) Advocate

கைது செய்வதற்கான பிடியாணையை யாருக்கு உத்திரவிடப்படலாம்?

(A) காவல் அதிகாரிகள் (B) நீதிமன்ற அலுவலர்கள்

(C) நிர்வாக நடுவர் (D) வழக்கறிஞர்

59. Which provision deals with anticipatory bail under criminal procedure code 1973?

(A) Section 436 (B) Section 437

(C) Section 438 (D) Section 439

குற்றவியல் விசாரணை முறைச் சட்டம், 1973-ன் கீழ் எப்பிரிவு முன்பிணை (அ) முன் ஜாமீன் பற்றி கூறுகின்றது?

(A) பிரிவு 436 (B) பிரிவு 437

(C) பிரிவு 438 (D) பிரிவு 439

60. Section 2 (h) of CrPC defined?

(A) Cognizable offence (B) Investigation

(C) Police report (D) Complaint

கு.வி.மு.ச.பிரிவு 2 (h) என்பது

(A) கைது செய்வதற்குரிய குற்றம் (B) புலன்விசாரணை

(C) காவலர் அறிக்கை (D) முறையீடு

61. Which section provides cancellation of bond and bail-bond?

(A) Section 446 (B) Section 446-A

(C) Section 447 (D) Section 448

எந்தப் பிரிவு பத்திரம் மற்றும் பிணை முறிவு பத்திரம் பற்றி கூறுகின்றது?

(A) பிரிவு 446 (B) பிரிவு 446-A

(C) பிரிவு 447 (D) பிரிவு 448

62. Which court can grant bail for a person apprehending arrest under Section 438 of CrPC?

(A) Magistrate court (B) Chief Judicial magistrate court

(C) Sessions court (D) Executive magistrate

கு.வி.மு.ச.பிரிவு 438 -ன் கீழ் எந்த நீதிமன்றம் ஒரு நபரை கைது செய்யப்படலாம் என அச்சப்படுபவரை எதிர்பார்ப்புப் பிணையில் அல்லது முன ஜாமீனில் விட உத்திரவிடலாம்?

(A) நீதித்துறை நடுவர் நீதிமன்றம் (B) தலைமை நீதித்தறை நடுவர்

(C) அமர்வு நீதிமன்றம் (D) நிர்வாகத் துறை நடுவர்

63. What is called reference under section 395?

(A) Clarified all doubts of lower court

(B) Clarified only question of law

(C) Clarified question of fact

(D) None of the above

பிரிவு 395-ன் கீழ் "காட்டுகை (அ) மேல் முடிவுக்கு அனுப்புதல்" என்று எதை அழைக்கப்படுகிறது?

(A) கீழ் நீதிமன்றங்களின் அனைத்து சந்தேகங்களுக்கும் விளக்கம் தருவது

(B) சட்ட வினாக்களுக்கு மட்டும் விளக்கம் தருவது

(C) பொருண்மைகளுக்கு விளக்கம் தருவது

(D) மேற்சொன்ன எதுவுமில்லை

64. Investigation is conducted by

(A) Judicial magistrate (B) Police officer

(C) Executive magistrate (D) Revenue inspector

புலன்விசாரணை யாரால் நடத்தப்படுகிறது ?

(A) நீதித்துறை நடுவர் (B) காவல் அதிகாரி

(C) நிர்வாகத்துறை நடுவர் (D) வருவாய் ஆய்வாளர்

65. Where the offence is punishable with fine only, the imprisonment in default can only be ————

(A) Simple (B) Rigorous

(C) Partly simple partly rigorous (D) No imprisonment

அபராதம் மட்டுமே தரத்தக்க குற்றங்களில், அந்த அபராதத்தை கட்டத் தவறினால் சிறைத்தண்டனை ———— ஆக மட்டுமே இருக்க முடியும்.

(A) சாதாரண (B) கடுங்காவல்

(C) பகுதி சாதாரண பகுதி கடுங்காவல் (D) சிறைத்தண்டனை இல்லை

66. Which section provides no imprisonment can be imposed for longer period than fourteen years to any offence?

(A) Section 30 (B) Section 31

(C) Section 32 (D) Section 33

எந்தக் குற்றத்திற்கும் 14 வருடங்களுக்கு மேல் தண்டனை வழங்கப்பட முடியாது எனக் கூறும் சட்டப்பிரிவு எது ?

(A) பிரிவு 30 (B) பிரிவு 31

(C) பிரிவு 32 (D) பிரிவு 33

67. Under Section 309 of CrPC the magistrate shall remand an accused person to custody for a maximum period of ———————— at a time.

(A) 15 days
(B) 30 days
(C) 45 days
(D) 60 days

கு.வி.மு.ச. பிரிவு 309-ன் கீழ் நீதித்துறை நடுவர் குற்றஞ்சாட்டப்பட்டவரை அதிகபட்சமாக ஒருமுறை எத்தனை நாட்களுக்கு நீதிமன்றக் காவலில் வைக்க வேண்டும்?

(A) 15 நாட்கள்
(B) 30 நாட்கள்
(C) 45 நாட்கள்
(D) 60 நாட்கள்

68. Summons of court can be served by

(A) Only by a police officer
(B) An officer of the court
(C) Public servant
(D) All of them

நீதிமன்ற அழைப்பாணை யார் மூலம் கொடுக்கப்படலாம்?

(A) காவல் அதிகாரி மூலமாக மட்டுமே
(B) நீதிமன்ற அதிகாரி
(C) பொது ஊழியர்
(D) மேற்சொன்ன அனைவரும்

69. Section 173 (1A) of CrPC mandates that an investigation in relation to rape of child may be completed within ———————— from the date of information was recorded.

(A) One month
(B) Two months
(C) Three months
(D) No time was prescribed

கு.வி.மு.ச. பிரிவு 173 (1A)-ன் கீழ் ஒரு குழந்தை வன்புணர்ச்சி தொடர்பான குற்ற வழக்குகளில் புலன் விசாரணை புகாரைப் பெற்ற தேதியிலிருந்து ————————க்குள் முடிக்கப்பட வேண்டும் என்று கூறுகின்றது.

(A) ஒரு மாதம்
(B) இரண்டு மாதங்கள்
(C) மூன்று மாதங்கள்
(D) காலம் குறிப்பிடப்படவில்லை

70. Power of Supreme Court to transfer cases and appeals is provided under ———— of CrPC.

(A) Section 406 (B) Section 407

(C) Section 408 (D) Section 409

உச்ச நீதிமன்றம் வழககுகளை மாற்ற மற்றும் மேல்முறையீடு செய்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள பிரிவு

(A) பிரிவு 406 (B) பிரிவு 407

(C) பிரிவு 408 (D) பிரிவு 409

71. Which section provides high court's powers of revision?

(A) Section 401 CrPC (B) Section 402 CrPC

(C) Section 403 CrPC (D) Section 482 CrPC

உயர்நீதிமன்றத்தினுடைய சீராய்வு அதிகாரத்தை பற்றிக் கூறும் சட்டப்பிரிவு எது?

(A) கு.வி.மு.ச. பிரிவு 401 (B) கு.வி.மு.ச. பிரிவு 402

(C) கு.வி.மு.ச. பிரிவு 403 (D) கு.வி.மு.ச. பிரிவு 482

72. Section 144 of CrPC order shall remain in force for more than

(A) One month (B) Two months

(C) Three months (D) Four months

கு.வி.மு.ச. பிரிவு 144 உத்திரவு எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும்

(A) ஒரு மாதம் (B) இரண்டு மாதங்கள்

(C) மூன்று மாதங்கள் (D) நான்கு மாதங்கள்

73. Section 164 of CrPC statement is recorded by ————

(A) Executive magistrate

(B) Judicial magistrate

(C) Police officer

(D) Reporters

கு.வி.மு.ச. பிரிவு 164 உரை யார் மூலம் பிதவு செய்யப்படுகிறது

(A) நிர்வாகத்துறை நடுவர்

(B) நீதித்துறை நடுவர்

(C) காவல் அதிகாரி

(D) பத்திரிக்கையாளர்கள்

74. Which section provides regarding the suspicious death cases to register F.I.R?

(A) Section 173

(B) Section 174

(C) Section 175

(D) Section 176

சந்தேக மரண வழக்குகளில் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்வது தொடர்பாக கூறும் சட்டப்பிரிவு

(A) பிரிவு 173

(B) பிரிவு 174

(C) பிரிவு 175

(D) பிரிவு 176

75. The issuance of summons to a person to produce a document is provided under ——— of CrPC?

(A) Section 91 (B) Section 93

(C) Section 99 (D) Section 90

ஆவணங்களை ஒப்படைப்பதற்கு (அ) முன்னிடுமாறு ஒரு நபருக்கு விடுவிக்கப்படும் அழைப்பாணை என்பது

(A) பிரிவு 91 (B) பிரிவு 93

(C) பிரிவு 99 (D) பிரிவு 90

76. When any information disclosing a cognizable offence, is laid before the officer in charge of a police station as per section 154 CrPC?

(A) He must arrest the person

(B) He must register the case

(C) First informant who send to the court

(D) (A) and (B)

கு.வி.மு.ச. பிரிவு 154-ன் கீழ் நிலை பொறுப்பு அதிகாரி கைது செய்வதற்குரிய குற்றத்திற்கான தகவலை பெற்றவுடன் செய்ய வேண்டியது?

(A) அவரை கைது செய்ய வேண்டும்

(B) அந்த வழக்கை பதிவு செய்ய வேண்டும்

(C) புகார்தாரரை நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும்

(D) (A) மற்றும் (B)

77. Permission to conduct prosecution comes under ——— of CrPC.

(A) Section 300 (B) Section 301

(C) Section 302 (D) Section 303

நீதிமன்றத்தின் அனுமதியுடன் அரசு தரப்பு வழக்கை நடத்துவது

(A) பிரிவு 300 (B) பிரிவு 301

(C) பிரிவு 302 (D) பிரிவு 303

78. Compensation to person groundlessly arrested is covered under ———— of CrPC

(A) Section 353
(B) Section 357 A
(C) Section 357 C
(D) Section 358

சரியான முகாந்திரம் (அ) காரணம் இல்லாமல் கைது செய்யப்பட்ட நபர்க்கு இழப்பீடு வழங்கும் பிரிவு

(A) பிரிவு 353
(B) பிரிவு 357 A
(C) பிரிவு 357 C
(D) பிரிவு 358

79. "Charge" is defined in the CrPC under

(A) Section 2(a)
(B) Section 2(b)
(C) Section 2(c)
(D) Section 2(d)

கு.வி.மு.சட்டத்தில் குற்றச்சாட்டு என்பதை வரையறை செய்யும் பிரிவு

(A) பிரிவு 2(a)
(B) பிரிவு 2(b)
(C) பிரிவு 2(c)
(D) பிரிவு 2(d)

80. Joinder of charges are permissible under ———— of CrPC

(A) Section 219
(B) Section 220
(C) Section 217
(D) Section 218

குற்றச்சாட்டை இணைத்தல் என்பது எந்த பிரிவின் கீழ் அனுமதிக்கப்படுகின்றது?

(A) பிரிவு 219
(B) பிரிவு 220
(C) பிரிவு 217
(D) பிரிவு 218

135/DD/20

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

## DEPARTMENTAL EXAMINATIONS

## THE JAIL TEST PART – I (b) CODE OF CRIMINAL PROCEDURE

(With Books)

Maximum Time : 30 minutes — Maximum Marks : 20

### *IMPORTANT INSTRUCTIONS*

### DESCRIPTIVE TYPE

### விரிவான விடையளிக்கும் வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**
வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

1. Answers in excess of the prescribed number of questions appearing at the end of the answer book will not be valued.

   விடைகளை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக எழுதியிருப்பின், விடைத்தாளின் இறுதியில் உள்ள அதிக எண்ணிக்கையிலான விடைகள் மதிப்பீடு செய்யப்படாது.

2. Answer should be in brief and to the point and need not be a verbatim reproduction of printed pages. (Applicable for tests to be answered "with books" only).

   விடைகள் சுருக்கமாகவும், வினாவிற்கு உரிய அளவிலும் இருக்க வேண்டும். புத்தகத்தில் உள்ளவற்றை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை திரும்ப எழுதக் கூடாது. (இக்குறிப்பு புத்தகங்களுடன் எழுதும் தேர்விற்கு மட்டும் பொருந்தும்)

3. In case of doubt, English version is the final.

   வினாக்களில் சந்தேகமிருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

**Answer any FOUR questions.**

**எவையேனும் நான்கு கேள்விகளுக்கு விடையளிக்கவும்.** **(4 × 5 = 20)**

1. Write short notes on "Accomplice".
   சிறு குறிப்பு வரைக – கூட்டுக் குற்றவாளி (அ) உடன் குற்றவாளி.

2. Write about the power to suspend or remit sentences and commute sentences.
   தண்டனைகளை நிறுத்தி வைக்கவோ, தள்ளுபடி செய்யவோ மற்றும் தண்டனையை குறைக்கும் அதிகாரம் குறித்து எழுதுக.

[Turn over

3. Explain – Courts of metropolitan magistrates.

பெருநகர் நடுவர்களின் நீதிமன்றங்கள் பற்றி விளக்குக.

4. What are the procedure to be followed an investigation and explain about the investigation?

புலன்விசாரணையில் என்ன நடைமுறை பின்பற்றப்பட வேண்டும் மற்றும் புலன்விசாரணை பற்றி விளக்குக.

5. Distinction between investigation and inquiry.

புலன்விசாரணை மற்றும் நீதிமன்ற விசாரணை ஆகியவற்றிற்கிடையேயான வேறுபாடு யாது?

6. What kind of procedure to be followed in case of insolvency or death of surety?

பிணையம் கொடுத்தவர் நொடிந்தவர் (அ) இறக்க நேரிட்டால் என்ன மாதிரியான நடைமுறை பின்பற்றப்பட வேண்டும்?

---